**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 210/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திருமதி. ராஜகுமாரி** |
| Father's Name/Husband Name: | **திரு. கண்ணன்** |
| Village : | ஒகளூர் |
| Taluk : | **குன்னம்** |
| Age : | 48 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2 , 3 ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஒகளூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் பள்ளியில் சமையல் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். ப.சா.2 ஜெகதீசன் எனது மகன். ப.சா3 ஜெயப்ரியா எனது மகள். ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். சம்பவத்திற்கு முன்பாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே இடம் தகராறு இருந்து வந்தது. கடந்த 22.03.2021 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் சம்பவம் நடந்தது. அன்றைய தினம் காலை எங்களுடைய இடத்தில் எதிரி குச்சி நட்டிருந்தார். நான் கேட்டுவிட்டு சென்றுவிட்டேன். அன்றைய தினம் மாலை 5.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது எதிரிகள் தர்மலிங்கம், வள்ளல் மற்றும் சங்கர் ஆகியோர் எங்கள் வீட்டின் முன்பாக வந்து தேவிடியா மகளே இது என் இடம் என்று திட்டினார்கள். நான் எதுவாக இருந்தாலும் உட்கார்ந்து பேசிக்கலாம் என்று சொன்னேன். நானும் எனது மகன் ஜெகதீசனும் எதிரிகளிடம் பேசிக் கொண்டிருந்தபோது எதிரி வள்ளல் எனது மகனின் சட்டையை பிடித்து அடிக்க

ஆரம்பித்துவிட்டார். எதிரி வள்ளல் எனது மகனின் உடல் முழுவதும் அடித்தார். சம்பவம் சமயத்தில் எனது மகள் ஜெயப்ரியா ஊரிலிருந்து பத்திரிக்கை வைப்பதற்காக எங்கள் வீட்டிற்குள் வந்திருந்தார். நானும் எனது மகளும் விலக்க சென்றபோது எதிரி வள்ளல் என் முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளிவிட்டார். அவ்வாறு கீழே விழுந்ததில் எனது வலது கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. விலக்க வந்த எனது மகள் ஜெயப்ரியாவை எதிரி சங்கர் எட்டி உதைத்து கீழே தள்ளிவிட்டார். எதிரி சங்கர் எனது மகளின் நெஞ்சில் எட்டி உதைத்தார். எதிரி வள்ளல் எனது மகளின் வயிற்றில் எட்டி உதைத்தார். எங்களால் அவர்களை விலக்கமுடியவில்லை. நான் சத்தம் போட்டேன். எனது மகனை எதிரி தர்மலிங்கம் பிடித்து கொண்டார். அதனால் என் மகனால் விலக்கமுடியவில்லை. நான் சத்தம் போடவே எதிரி சங்கர் சாவிக் கொத்திலிருந்த கத்தியை காண்பித்தும், எதிரி வள்ளல் கட்டையை காண்பித்தும் எங்களை கொன்றுவிடுவதாக மிரட்டினார். அனைவரும் வந்தவுடன் எதிரிகள் சென்றுவிட்டனர். எனது மகள் பேச்சுமூச்சு இல்லாமல் மயக்கமாகிவிட்டார். காயம்பட்ட நானும், எனது மகளும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக லெப்பைக்குடிக்காடு அரசு மருத்துவமனை சென்று அதன்பிறகு மேல் சிகிச்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்தோம். நான் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். என் மகளை மேல் சிகிச்சைக்காக தனலெட்சுமி மருத்துவமனையில் சேர்த்தேன். வழக்கு சம்பவம் சம்பந்தமாக நான் போலிசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது மகள் இரண்டு நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார். இந்த வழக்கு சம்பவம் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்கத்தெரியும் என்றால் சரிதான். புகாரை நான் தான் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு எப்போது போனேன் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் மங்களமேடு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். யாரெல்லாம் புகார் கொடுக்க சென்றோம் என்றால் நான் மட்டும் தான். ஒகளூர் (மேற்கு) வருவாய் கிராமம் எனது சொந்த கிராமம் என்றால் சரிதான். எங்களுக்கு சொந்தமாக இடம் ஒகளூர் கிராமத்தில் உள்ளதா என்றால்

உள்ளது. அதன் சர்வே எண் ஞாபகமில்லை. ஒகளூர் (மேற்கு) கிராம புல எண் 162/10 எனது தந்தைக்கும் எதிரி தர்மலிங்கம் என்பவருக்கும் நிலம் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். அந்த இடம் சம்மந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் அடிக்கடி பிரச்சனை வரும் என்றால் சரிதான். எதிரி தர்மலிங்கம் என்பவர் இடத்தை தனிப்பட்டாவாக மாற்றிக்கொள்ள 16.02.2021ம் தேதி இடத்தை அளக்க மனு கொடுத்தார் என்றால் சரிதான். 22.03.2021 ம் அன்று நில சர்வேயர் அளந்து அத்துக் காண்பித்தார் என்றால் சரிதான். இடத்தை அளக்கும்போது கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் இருந்தார்கள் என்றாலும், அவர்கள் எனக்கு தகவல் சொன்னாலும் சரியல்ல. அந்த நிலத்தை அளந்து சென்ற பின்பு அங்கு நட்டு வைத்திருந்த குச்சிகளை நான் பிடுங்கி எறிந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு நிலத்தை அளந்து அத்து காண்பித்த குச்சியை பிடுங்கி எறிந்ததாக மங்களமேடு காவல் நிலையத்தில் எதிரி தர்மலிங்கம் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது உறவினர் ஐஸ்வர்யா என்பவர் காவல் துறையில் பணிபுரிகிறாரா என்றால் பணிபுரிகிறார். உறவினரான காவல் அதிகாரியை பயன்படுத்தி தான் எதிரி தர்மலிங்கம் கொடுத்த புகார் மீது மேல் நடவடிக்கை விடாமல் நான் கொடுத்த பொய்யான புகார் மீது நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை திட்டியதாகவும், அடித்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களது நிலப்பிரச்சனை காண்பித்து தான் எங்களது உறவினர்களையே இவ்வழக்கின் சாட்சியாக காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.